


மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழியில் இராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதி ஆற்காடு மேற்கு ஒன்றியம் பகுதிகளில் உள்ள வாக்காளப் பெருமக்களுக்கு மற்றும் மதச்சார்பற்ற கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுக்கு முன்னாள் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் – இராணிப்பேட்டை மாவட்டக் கழகச் செயலாளர் ஆர். காந்தி நன்றி தெரிவித்தார். இதில் ஒன்றியச் செயலாளர் ஏ.வி.நந்தகுமார், ஜி.கே.குழுமம் சந்தோஷ், காந்தி, ஒன்றிய துணைத் தலைவர் ஸ்ரீமதி நந்தகுமார், ஒன்றிய கழக நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் உடனிருந்தனர்.

### பா.ஜ.க.வுக்கு எதிராக

# எதிர்க்கட்சிகள் ஒன்றிணைய வேண்டும்!

## மம்தா பானர்ஜி அழைப்பு!

கொல்கத்தா, மே 11 –

மேற்கு வங்கத்தில் ரவீந்திரநாத் தாகூரின் பிறந்த தினத்தை ஒட்டி கொல்கத்தாவில் நேற்று நடந்த நிகழ்ச்சியில் முன்னாள் முதல்வர் மம்தா பானர்ஜி பேசியதாவது:-



பா.ஜ.க.வுக்கு எதிராக இடதுசாரிகள் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஓரணியில் திரள வேண்டும். தேசிய கட்சிகளும் பா.ஜ.க.வுக்கு எதிராக ஒன்றிணைய வேண்டும். இதுதொடர்பாக அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த நான் தயாராக உள்ளேன்.

என்னுடைய முதல் எதிரி பா.ஜ.க., இந்த நேரத்தில் எதிரிக்கு எதிரி எனக்கு நண்பன் என்ற கண்ணோட்டத்தில் சிந்திக்கக் கூடாது. எதிர்க்கட்சிகள் மட்டுமன்றி மாணவர் அமைப்புகள், தன்னார்வ தொண்டு அமைப்புகளும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியது அவசியம்.

காங்கிரஸ் தலைவர்கள் கார்கே, சோனியா, ராகுல், ஜார்க்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன், டெல்லி முன்னாள் முதல்வர் கேஜ்ரிவால் உள்ளிட்டோர் என்னிடம் பேசினர். உத்தவ் தாக்கரே, ராஷ்டிரிய ஜனதா தள மூத்த தலைவர் தேஜஸ்வி யாதவ் ஆகியோர் தகவல்களை அனுப்பி உள்ளனர். அகிலேஷ் யாதவ் நேரில் வந்து ஆதரவை தெரிவித்தார். மாநில, தேசிய அளவில் பா.ஜ.க.வுக்கு எதிராக தொடர்ந்து போராடுவேன்.

இவ்வாறு மம்தா பானர்ஜி தெரிவித்தார்.

### தமிழ்நாட்டில் ஆளுநர் ஆட்சி வந்துவிடக்கூடாது என்பதாலேயே

# த.வெ.க.வுக்கு விடுதலைச் சிறுத்தைகள் ஆதரவு!

## கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் விளக்கம்!

சென்னை, மே 11

த.வெ.க.வுக்கு ஆதரவளித்தது பற்றி வி.சி.க. தலைவர் தொல். திருமாவளவன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் ஆட்சியமைக்க வி.சி.க. நேற்று ஆதரவு கடிதம் அளித்துள்ளது. அதில், “தமிழக வெற்றிக் கழகம் 108 இடங்களில் வெற்றிபெற்றும் ஆட்சியமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியில்’ விசிக 8 தொகுதிகளில் போட்டியிட்டு 2ல் வெற்றி பெற்றது. அதேபோல, இடதுசாரிகளும் தலா 2 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளனர்.



மக்கள் நல கூட்டணி உருவான காலத்திலிருந்து கொள்கை அடிப்படையில் இடதுசாரிகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறோம். மக்கள் பிரச்னையில் ஒருங்கிணைந்து களமாடியிருக்கிறோம். ஆகவே, இந்த அரசியல் நெருக்கடி உருவாகியிருக்கும் சூழலில் நாங்கள் தொலைநோக்கு பார்வையோடு எதிர்கால அரசியலையும் கருத்தில் கொண்டு அதனடிப்படையில் கலந்து பேசி முடிவெடுத்துள்ளோம்.

கம்யூனிஸ்ட் கட்சிகள் மாநிலக் குழுவைக் கூட்டி தவெகவுக்கு ஆதரவைத் தெரிவித்திருந்தனர். அதனைத் தொடர்ந்து, வி.சி.க. உயர்நிலைக் குழு கூட்டப்பட்டு நிர்வாகிகளுடன் கலந்துரையாடப்பட்ட நிலையில், நிறைவாக கட்சியின் தலைவர் இறுதி முடிவை மேற்கொள்ள தீர்மானம் எடுக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் இந்த அரசியல் சூழ்நிலையைக் காரணம் காட்டி குடியரசுத் தலைவர் ஆட்சி இங்கு வரக்கூடாது. இந்த நிலையில், த.வெ.க. தலைவர் விஜய் ஆட்சியமைக்க ஆதரவளிக்க வி.சி.க. முடிவெடுத்தது. குடியரசுத் தலைவர் ஆட்சி இங்கு வந்துவிடக்கூடாது என்ற அடிப்படையிலும், 108 இடங்களில் வெற்றிபெற்றும் தவெக ஆட்சியமைக்க முடியாமல் திணறிக்கொண்டிருக்கக்கூடிய நிலையில் அவர்கள் ஆட்சியமைக்க வி.சி.க. ஆதரவளிக்க வேண்டும் என்கிற அடிப்படையிலும் இந்த ஆதரவு நிலைப்பாட்டை நாங்கள் எடுத்திருக்கிறோம். அந்த அடிப்படையில் தவெகவுக்கு ஆதரவு கடிதத்தை வழங்கியுள்ளோம்.

இதுவே, எங்கள் இறுதி நிலைப்பாடு. இடதுசாரிகளின் நிலைப்பாட்டை ஒட்டியே நாங்கள் முடிவெடுப்போம் என்று நாங்கள் தெரிவித்திருந்தோம். அதேபோல, நாங்கள் தவெகவுக்கு வெளியிலிருந்து ஆதரவு வழங்க முடிவெடுத்துள்ளோம்.” என்று தொல். திருமாவளவன் தெரிவித்தார்.

### ஐ.எப்.எஸ். இறுதி தேர்வு முடிவு வெளியீடு!

# இந்திய அளவில் 148 பேர் தேர்ச்சி!

## சென்னை மாணவி ரவி லட்சுமிபிரியா முதல் இடத்தை பிடித்தார்!

சென்னை, மே 11-

ஐஎப்எஸ் தேர்வு முடிவு வெளியிடப்பட்டது. இந்திய அளவில் 148 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். தமிழகத்தில் மட்டும் 17 பேர் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளனர். இதில் சென்னை மாணவி ரவி லட்சுமிபிரியா முதல் இடத்தை பிடித்துள்ளார்.

மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் (யுபிஎஸ்சி) ஆண்டுதோறும் ஐஎப்எஸ் (இந்திய வனப் பணி) பணிக்கான சிவில் சர்வீஸ் தேர்வை நடத்துகிறது. 2025ம் ஆண்டுக்கான 150 பதவிகளை நிரப்புவதற்கான அறிவிப்பை வெளியிடப்பட்டது. முதலில் முதல் நிலை தேர்வு எழுத்து நடத்தப்பட்டது. தொடர்ந்து கடந்த ஆண்டு நவம்பர் 16 முதல் 23ம் தேதி வரை மெயின் தேர்வு நடத்தப்பட்டது. தொடர்ந்து இந்தாண்டு பிப்ரவரி மாதம் 25ம் தேதி மெயின் தேர்வுக்கான ரிசல்ட் வெளியிடப்பட்டது. இதில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு கடந்த ஏப்ரல் 6ம் தேதி முதல் ஏப்ரல் 15ம் தேதி வரை நேர்காணல் நடைபெற்றது. இந்த நிலையில் நேர்முக தேர்வு முடிந்து நேற்றிரவு யுபிஎஸ்சி தனது இணைய தளத்தில் இறுதி தேர்வு முடிவை வெளியிடப்பட்டது. இதில், இந்தியா முழுவதும் 148 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதில் 15 பேர் தமிழகத்தை சேர்ந்தவர்கள் ஆவர்.

இது குறித்து சங்கர் ஐஏஎஸ் அகாடமி நிர்வாக இயக்குனர் வைஷ்ணவி சங்கர் கூறியதாவது:

ஐஎப்எஸ் தேர்வுக்கான நேர்காணல் முடிவடைந்ததையடுத்து இறுதி தேர்வு முடிவை யுபிஎஸ்சி தனது இணையதளமான www.upsc.gov.in வெளியிட்டது. இந்திய அளவில் 148 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். தேர்ச்சி பெற்ற 148 பேரில் 84 பேர் சங்கர் ஐஏஎஸ் அகடாமி மாணவர்கள். சென்னை, டெல்லி, பெங்களூர், திருவனந்தபுரம் மையங்களில் படித்தவர்கள். முதல் 10 இடங்களில் 6 இடங்களை எங்கள் மாணவர்கள் கைப்பற்றி உள்ளனர். தமிழ்நாட்டில் இருந்து மொத்தம் 17 பேர் வெற்றி பெற்றுள்ளனர். 14 மாணவர்கள் எங்கள் மையத்தில் படித்தவர்கள். தேர்ச்சி பெற்றவர்களில் இதில் 5 பேர் பெண்கள். எங்களது ஜிஎஸ் பிசிஎம் அறக்கட்டளை பாடநெறி மாணவியான ரவி லட்சுமிப்பிரியா, அகில இந்திய அளவில் 9வது இடத்தைப் பிடித்து, தமிழக அளவில் முதலிடம் பெற்றுள்ளார். இவர் சென்னை மாம்பலத்தை சார்ந்தவர் ஆவார்.

அகில இந்திய அளவில் சித்தார்த் அகில இந்திய அளவில் 3வது இடமும், ஆஞ்சல் சர்மா அகில இந்திய அளவில் 5வது இடமும், அனூப் ரெட்டி அகில இந்திய அளவில் 6வது இடமும், சங்கல்ப் தீட்சித் 8வது இடமும், ரவி லட்சுமிப்பிரியா 9வது இடமும், அஷ்வனி குமார் ராய் 10வது இடமும் பிடித்துள்ளனர்.

இவ்வாறு வைஷ்ணவி சங்கர் கூறினார்.

### தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் தொடர்வோம்! தமிழ்நாட்டின் நலன் கருதி

# புதிய அரசுக்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் நிபந்தனையற்ற ஆதரவு!

## உயர்நிலைக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்! பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் அறிவிப்பு!

சென்னை, மே 11-

தி.மு.க. தலைமையிலான நீண்ட கால கூட்டணியில் தொடர்வோம் எனவும், தமிழ்நாட்டின் நலன் கருதி புதிய அரசுக்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் நிபந்தனையற்ற ஆதரவை அளிப்பதாகவும் உயர்நிலைக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக அக்கட்சியின் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் தெரிவித்துள்ளார்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உயர்நிலைக் குழு தீர்மானம் வருமாறு:-

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில உயர்நிலைக்குழு கூட்டம் 09.05.2026 மாலை 4 மணிக்கு தலைமை நிலையம் காயிதே மில்லத் மன்ஜில், சென்னை - 1 என்ற முகவரியில் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தி.மு.க. தலைமையில் வென்ற உறுப்பினர்கள்!**



தமிழகத்தில் 2026 ஏப்ரல் 23இல் நடைபெற்ற சட்டமன்ற பொதுத் தேர்தலில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இடம் பெற்று, திமுக மற்றும் தோழமை இயக்கங்களின் பெரும் ஆதரவுடன் வாணியம்பாடி, பாபநாசம் ஆகிய இரண்டு தொகுதிகளில் வெற்றி பெற்று, முறையே எஸ்.எஸ்.பி.சையத் பாரூக் பாஷா மற்றும் ஏ.எம்.ஷாஜகான் ஆகிய இருவரும் சட்டமன்ற உறுப்பினர்களாகி இருக்கிறார்கள்.

ஜனநாயக தேர்தல் முடிவுகள் தமிழக வெற்றி கழகத்திற்கு 108 தொகுதிகளில் மட்டும் வெற்றியை தந்திருக்கிற நிலையில், தமிழகத்தில் அரசு அமைப்பதில் சுணக்கம் ஏற்பட்டுள்ள நிலையில் மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் அரசு அமைப்பதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சரும் திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள்.

**ஜனநாயகக் கடமை!**

தமிழக வெற்றிக் கழகம் தமிழ்நாட்டில் அரசு அமைப்பதற்கு திமுக கூட்டணியில் இடம் பெற்றிருக்கும் அரசியல் இயக்கங்கள் தங்களின் ஆதரவை தெரிவித்து வருகின்றன. தமிழ்நாட்டில் அரசு அமைப்பதற்கு இன்னும் இரண்டு சட்டமன்ற தொகுதிகளின் உறுப்பினர்களின் ஆதரவு வேண்டும் என்ற நிலை உருவாகியுள்ளதால் தமிழகத்தில் புதிய அரசு அமைப்பதற்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் இரண்டு உறுப்பினர்களின் ஆதரவை வேண்டி தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் ஜோசப் விஜய் அவர்களின் கடிதம் இந்திய யூனியன் முஸ்லிம் லீகிற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் ஜனநாயக முறையிலான அரசு அமைப்பதற்கு உதவ வேண்டிய கட்டாயம் ஜனநாயக கடமையாக இருக்கிறது. இந்த ஜனநாயக கடமையை செய்வதற்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் இந்த மாநில அவசர உயர்நிலை குழு முடிவு செய்கிறது.

தமிழகத்தில் புதிய அரசு அமைப்பதற்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களும் நிபந்தனையற்ற ஆதரவளித்து எல்லா வகையிலும் ஒத்துழைத்து துணைபுரிவர் என்பதை இக்கூட்டம் தெரிவிக்கிறது. தமிழக வெகுஜன மக்கள் குறிப்பாக முஸ்லிம் சமுதாயத்தின் உணர்வும் எதிர்பார்ப்பும் ஜனநாயக முறையிலான அரசு உருவாக்கப்பட வேண்டும் என்பதே ஆகும். தமிழகத்தில் ஆளுநர் ஆட்சி என்பது வரவேற்புக்கு உரியது அல்ல என்பதையும் ஜனநாயக அரசு உருவாக்குவதை தவிர்த்தால் மக்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டு விடும் என்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உயர்நிலை குழு கருதுகிறது.

**பாரம்பரியத்தை பேணிக் காப்போம்!**

தமிழகத்தின் பாரம்பரியத்தை பேணிக் காப்பதற்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் இந்த முடிவு எடுத்து அறிவிக்கிறது. தமிழக அரசியலில் நீண்ட காலமாக திமுக தலைமையிலான கூட்டணியில் இருந்து வரும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் அதே நிலையில் தொடரும். தமிழகத்தில் ஜனநாயக முறையிலான ஆட்சி உருவாவதற்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில உயர்நிலை குழு இந்த தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறது.

இவ்வாறு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் துணைத் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் தெரிவித்துள்ளார்.

# முப்படை தலைமை தளபதியாக என்.எஸ்.ராஜா சுப்பிரமணி நியமனம்!

## தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்!

புதுடெல்லி, மே 11-

புதிய முப்படை தலைமை தளபதியாக தமிழ்நாட்டைச் சேர்ந்த லெப்டினன்ட் ஜெனரல் என்.எஸ்.ராஜா சுப்பிரமணி நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த 2022ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் முப்படைகளின் தலைமை தளபதியாக அனில் சவுகான் பதவி வகித்து வருகிறார். இவரது பதவிக் காலம் கடந்த ஆண்டு செப்டம்பரில் நிறைவடைந்த நிலையில் இம்மாதம் 30ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நாட்டின் புதிய முப்படை தலைமை தளபதியாக மிக மூத்த ராணுவ தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் என்.எஸ். ராஜா சுப்பிரமணியை ஒன்றிய அரசு நேற்று நியமித்துள்ளது. 1985ம் ஆண்டில் ராணுவத்தில் சேர்ந்த ராஜா சுப்பிரமணி 40 ஆண்டுகளில் பல்வேறு முக்கிய பொறுப்புகளை வகித்தவர்.

பாகிஸ்தான் மற்றும் சீனா விவகாரங்களில் நிபுணராக அறியப்படும் ராஜா சுப்பிரமணி, கடந்த ஆண்டு ஜூலை 31ல் ராணுவ துணைத் தலைமை தளபதி பதவியில் இருந்து ஓய்வு பெற்றார். அதைத் தொடர்ந்து தேசிய பாதுகாப்பு கவுன்சிலில் ராணுவ ஆலோசகராக பணியாற்றி வந்தார். நாட்டின் 3வது முப்படை தலைமை தளபதியாக அவர் வரும் 30ம் தேதி பொறுப்பேற்பார். இத்துடன், ராணுவ விவகாரங்கள் துறையின் செயலாளராகவும் ராஜா சுப்பிரமணி செயல்பாடுவார் என பாதுகாப்பு அமைச்சகம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கடந்த 2020ம் ஆண்டில் முப்படைகளின் தலைமை தளபதி பதவி உருவாக்கப்பட்டது. முதலில் இப்பதவியில் பொறுப்பேற்ற பிபின் ராவத் கடந்த 2021ல் தமிழ்நாட்டில் நடந்த ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்தார். மும்பையில் பிறந்தவரான ராஜா சுப்பிரமணி தமிழ்நாட்டை பூர்வீகமாகக் கொண்டவர். பிராக்னெல் (இங்கிலாந்து) கூட்டு சேவைகள் கட்டளை மற்றும் பணியாளர் கல்லூரி மற்றும் டெல்லியில் உள்ள தேசிய பாதுகாப்பு கல்லூரியின் முன்னாள் மாணவரான அவர் லண்டனில் உள்ள கிங்ஸ் கல்லூரியில் முதுகலை பட்டமும், சென்னை பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு ஆய்வுகளில் எம்பில் பட்டமும் பெற்றுள்ளார்.

அசாமில் கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கைகளில் 16 கார்வால் ரைபிள்ஸ் படைப்பிரிவுக்கும், ஜம்மு காஷ்மீரில் 168 காலாட்படை பிரிகேடுக்கும், மற்றும் சவாலான செயல்பாட்டுச் சூழலில் மத்தியப் பகுதியில் 17 மலைப் பிரிவுக்கும் மேற்கு முனையில் ராணுவத்தின் முதன்மையான தாக்குதல் படைப்பிரிவு உட்பட 2 படைப்பிரிவுகளுக்கு தலைமை தாங்கி சிறந்து விளங்கினார். மேற்கு, வடக்கு எல்லை இரண்டிலும் ஆழ்ந்த அனுபவர் கொண்டவர் ராஜா சுப்பிரமணி என பாதுகாப்பு அமைச்சக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**★ கடற்படை தளபதியாக சுவாமிநாதன் நியமனம்!**

தற்போதைய கடற்படை தளபதியாக உள்ள தினேஷ் குமார் திரிபாதியின் பதவிக்காலம் வரும் 31ம் தேதியுடன் முடிவடையும் நிலையில், புதிய தளபதியாக துணை அட்மிரல் கிருஷ்ண சுவாமிநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த 1987ல் கடற்படை அதிகாரியாக நியமிக்கப்பட்ட கிருஷ்ண சுவாமிநாதன், தகவல் தொடர்பு மற்றும் மின்னணு போர் உத்தியில் நிபுணத்துவம் பெற்றவர். தற்போது, மேற்கு கடற்படை தளத்திற்கு தலைமை தாங்கும் சுவாமிநாதன் பெங்களூருவை சேர்ந்தவர். இவர் வரும் 31ம் தேதி பதவி ஏற்க உள்ளார்.



கோடை வெப்பத்தை தணிக்கும் விதமாக திருவள்ளூர்மேற்குமாவட்டம் திருவள்ளூர் நகரத்தில் உள்ள தாலுக்கா ஆபீஸ் அருகில் மற்றும் மீரா திரையரங்கம் அருகில் திருவள்ளூர் நகர மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன் ஏற்பாட்டில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் ஆகியோர் தண்ணீர் பந்தலை திறந்து வைத்து இளநீர், மோர், தர்பூசணி, வெள்ளரி, குளிர் பானங்கள் வழங்கினார்கள். உடன் நகர – ஒன்றிய செயலாளர்கள் சி.சு.ரவிச்சந்திரன்,கூளூர் எம்.ராஜேந்திரன், தா.மோதிலால், நிர்வாகிகள் ப.சிட்டிபாபு, பொன்.பாண்டியன்,தி.ஆ.கமலக்கண்ணன், டி.எம்.ரவி, என்.பரசுராமன், ராஜேஷ்வரி கைலாசம், இ.குப்பன், டி.என்.ஆர்.சீனிவாசன், டி.சிவாகுமார், டி.ஆர்.திலீபன், ஜி.வேலாயுதம், ஆர்.விஜயகுமார், டி.செல்வகுமார், ஜி.ஆர்.ராஜ்குமார் தாமஸ், நரேஷ்குமார்,வி.ஜான், தா.அய்யூப் அலி, நீலாவதி பன்னீர்செல்வம், அ.பவளவண்னன், ஜி.பாண்டியன், கே.ஜி.பி.கேசவன், பி.ராஜி, சொக்கலிங்கம், உலகநாதன், டொனால்ட், முரளி, உலகநாதன், தியாகு, சித்தரை, பாலகிருஷ்ணன், பாலசந்திரன், ஆர்.சசி, ராஜ்பால், சுனில், அமர்நாத் மற்றும் நகர நிர்வாகிகள் கழக நிர்வாகி பலர் உள்ளனர்.